www.padippakam.com

# மலரட்டும் தமிழீழம்

பாட்டாளி மக்கள் கட்சி

ஆரோ..புட் கிளை

வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

பா. ம. க. வெளியீடு : 1

ஆரோபுட் கிளை

முதற்பதிப்பு : கன்னி. தி. பி. 2024

ஆக்கியோன் தொடர்பு முகவரி:

**வெண்குயில்**
ஆரோபுட் எதிர்புறம்,
இராவுத்தன் குப்பம் (அஞ்சல்),
புதுவை - 605 101.

இந்நூல்....

தமிழ் மண்ணுக்காக
தமிழ் பகையை
தமிழ் மண்ணில் கொன்றழித்த
தங்கத் தமிழச்சிக்கு

நன்கொடை உருபா : 3.00

படிப்பகம்

www.padippakam.com

## உலகத்தமிழினம்.

உலகத்தமிழினம் என்று சிந்திக்கின்றபோது, 1. தமிழ் தாயகங்களில் வாழும் தமிழர்கள், 2. தமிழ் சேயகங்களில் வாழும் தமிழர்கள், 3. இந்தியத் துணைக்கண்டத்தின் பிற மாநிலங்களில் வாழும் தமிழர்கள், 4. உலகின் பிற நாடுகளில் வாழும் தமிழர்கள் - என நான்கு வகையாக பிரிக்கலாம்.

ஈழத்திலும் , தமிழகத்திலும் வாழும் தமிழர்கள் **'தமிழ்த் தாயகங்களில்'** வாழ்வாராவர்.

மலேசியா, சிங்கப்பூர், பர்மா, இந்தோனிசியா, பிசி, மொரிசியசு, சீசல்சு, மடகாசுகர், கயானா, சூரிநாம் ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்களைத் **'தமிழ்ச்சேயகங்களில்'** வாழும் தமிழர்கள் என்று குறிப்பிடலாம். ஏனெனில் அந்நாடுகளில் வாழும் தமிழர்கள், அந்நாடுகளின் தேசிய சிறுபான்மையினரேயன்றி அயலவரல்லர்.

இன்னும் பழைய பிரிட்டீசு பிரஞ்சுக் குடியேற்றப் பகுதிகளில் (ரியூனியன், ஆங்காங், குவாடிலூப் போன்றவற்றில்) வாழும் தமிழர்களும், தேசிய சிறுபான்மையினரேயாவர். ( ரியூனியனைப் பொருத்தவரை தமிழர்களே பெரும்பான்மையினர் )

இந்தியத் துணைக்கண்டத்தின் பிற மாநிலங்களில் வாழும் தமிழர்களை எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டையொட்டியுள்ள ஆந்திர, கருநாடக, கேரள மாநிலங்களைப் பொறுத்தவரை அவற்றில் வாழும் தமிழர்களில் பெரும்பான்மையினர் மண்ணின் மைந்தர்களே, அதாவது **மொழிவழி மாநிலப் பிரிவினையின்போது தமிழ்ப்பகுதிகள் அம்மாநிலங்களில் இணைக்கப்பட்டதனால் அம்மாநிலத்தோராகி விட்டவர்களே இத்தமிழர்கள்.**

## மக்கள் தொகை.

தமிழர்கள் தேசிய சிறுபான்மையினராகவுள்ள நாடுகளில், இலங்கையில் அந்நாட்டு மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினராகவும், மலேசியாவில் 10 விழுக்காட்டினராகவும், சிங்கப்பூரில் 9 விழுக்காட்டினராகவும், பர்மாவில் 7 விழுக்காட்டினராகவும், இந்தோனிசியாவில் 3 விழுக்காட்டினராகவும், மொரிசியசில் 11 விழுக்காட்டினராகவும்,பிசியில் 20 விழுக்காட்டினராகவும், கயானாவில் 21விழுக்காட்டினராகவும், சூரிநாமில் 9 விழுக்காட்டினராகவும் உள்ளனர் ( இது மொரிசியசில் நடந்த 7 வது உலகத்தமிழ் மாநாட்டில் படிக்கப்பட்ட பல்வேறு அறிக்கைகளிலிருந்து திரட்டப்பட்டவை )

படிப்பகம்

www.padippakam.com



நம் தமிழ்நாடும் ஒரு மாநிலமாகவுள்ள இந்தியாவில் தமிழர்கள் 7 விழுக்காடு என்பதும் ; தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் பிறமொழி பேசுவோரை நீக்கித் தமிழர்கள் 84.51 விழுக்காடு என்பதும் 1961-ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி உள்ள நிலையாகும். உலகம் முழுவதுமாக நோக்க ஏறத்தாழ தமிழ் பேசுவோரின் தொகை 9 கோடியாக உள்ளது. பல நாடுகளில் பரவி வாழும் இனம் என்ற முறையில் நோக்கினால் 23 உரிமை நாடுகளையுடைய அரேபியர்களை விடவும் தமிழர்களே தொகையில் அதிகமுள்ளோம் ஆனால் **நமக்கு ஒரே ஒரு உரிமை நாடு கூட** இல்லை நம்மை விட 2 கோடி அதிகமாக 11 கோடி பேராக உள்ள சப்பானியர்கள் 11 உரிமை நாடுகளைப் பெற்றிருக்கிறார்கள். நம்மைப்போலவே **இந்தியாவில் ஒரு மாநிலத்தவராக உள்ள வங்காளிகள் இந்தியாவுக்கு வெளியே வங்க மொழிக்கென்று தனியே ஓர் உரிமை நாட்டைப் பெற்றுத் திகழ்கிறார்கள்.**

உலகம் முழுவதும் நாடோடிகளாகத் திரிந்த யூதர்கள் 1948-இல் இசுரேல் என்ற ஒரு நாட்டை தங்களுக்கென்று படைத்துக்கொண்டார்கள் ; அதுவும் **பாலத்தீன அராபியர்களுடைய மண்ணை** ஆக்கிரமித்தே அதை நிறுவினார்கள். இருந்தும் உலகம் அதனை அங்கீகரித்து விட்டது. **செத்துக் கிடந்த 'ஈப்ரு' மொழி** இன்று மீண்டும் உயிர் பெற்று பாலர் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை இசுரேலில் கோலோச்சுகிறது. 700 கல் தூரத்திற்கு அப்பால் உகண்டாவிலுள்ள என்டபி விமானத் தளத்தை இசுரேலின் தலைநகர் **தெல் அவிவில்** இருந்தே அவர்களால் அடித்து தகர்க்க முடிகிறது பாலைவனமாக இருந்த இசுரேலைப் பசுஞ்சோலையாக்கி அய்ரோப்பாவுக்கு வேண்டிய காட்கனிகளை அவர்களால் அங்கிருந்து ஏற்றுமதி செய்யமுடிகிறது. இத்தனைக்கும் உலகம் முழுவதிலுமுள்ள ஒன்றரைக்கோடி யூதர்களில் இசுரேலில் வாழ்வோர் 25 இலட்சம் பேர்தான் என்றாலும் அந்த இசுரேல் உரிமை நாடாக இருப்பதால் உலக யூதர்களுக்கெல்லாம் காவல் அரணாகத்திகழ்கிறது.

தமிழீழம் தனிநாடாக மலரும்போது இவையெல்லாம் சாத்தியமே.

## இலங்கை

இந்தியத் துணைக் கண்டத்தின் கிழக்கே சின்னஞ் சிறிய ஒரு தீவாக இலங்கை இருக்கிறது. இலங்கையைப்பொறுத்தவரை, இந்தியத்துணைக்கண்டத்தில் தமிழ்நாட்டில் எப்படித் தமிழர்கள் தொன்று தொட்டு வாழ்ந்து வருகிறார்களோ, அப்படியே இலங்கையின் ஈழப்பகுதியிலும் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

இலங்கை 'இல்' என்பது 'ஒளி' 'குறி' என்றவாறான பொருளடிப்படைகளை ஒரு புடையே பெற்றதாகும். ஒப்புநோக்குக : இல் > இல் + அங்கு > இலங்கு = ஒளிவிடு விளங்கு, தெளியத் தெளிவுறு. ஒளிரும் பொருளே தெளிவாகத் தெரியும் பொருளாயிருத்தலின், ( இல் ) இலக்கு என்பது, ஒளிருகின்ற அல்லது தெளிவாகத் தெரிகின்ற



படிப்பகம்

www.padippakam.com



ஒரு குறியைக் குறித்தது, ஒளியைக் குறித்த ' இல் ' என்னும் ஒரு மூல வேர்ச்சொல் ' எல் ' என்றவாறு திரிபெய்திக் கதிரவனைக் குறித்து நின்றமையும் இங்கு கருதிப் பார்க்க வேண்டும். ஒப்புநோக்குக ; எல் — எல்லோன் = ஞாயிறு, கதிரவன் (மேலும் காண்க) எல்லே இலக்கம் ( தொல்காப்பியம், சொல் அதிகாரம், 7. 21 ). இல் > இல் + அங்கு > இலங்கு > இலங்கை = விளங்கித் தெரிவது ( கடலிடையே விளங்கித் தெரிவதாகிய தீவு )

அக்காலத்தே கடற் செலவு ( கடற்பயணம் ) மேற்கொண்ட தமிழர்களுக்கு, இத்தீவு துலங்கவும் விளங்கவும் தெரிந்த தோற்றமாய் இருக்கவே விளங்குதல், ஒளிறுதல், தோன்றுதல், குறியாய் இருத்தல் போலும் பொருள்களைச் செறிந்த 'இலங்கு' என்னும் சொல்லினின்று 'இலங்கை' என்னும் பெயரைச் சூட்டியிருக்கின்றனர் நீண்ட நெடுந்தூர அயலகக் கடற்செலவைப் பன்முறை மேற்கொண்ட தமிழர்களுக்கு தாம் திரும்பி வருகையில், தம் நிலத்திற்கு அருகில் உள்ள இப்பெருந்தீவே தமக்கு ஓர் அடையாளக் குறியாய் விளங்கியமையும் இப்பெயரால் சுட்டுவதற்குக் காரண-மாயிருந்திருக்கலாம்.

எனவே, இலங்கை என்பது தூய செந்தமிழ்ப் பெயர் ஆகும். இச்சொல்லின் கொடுந்திரிபே 'லங்க' 'லங்கா' என்பவை. அச்சொல்லின் முன் 'திரு' என்னும் தூய செந்தமிழ்ச்சொல்லின் வடபால் திரிபான 'ஸ்ரீ' என்பதை அடைமொழியாகச் சேர்த்தே அவர்கள் இன்றைக்கும் 'ஸ்ரீ லங்கா' என்றவாறு குறிப்பிடுகின்றனர்.

## சிங்களவர் இலங்கைத் தீவுக்கு அயலவர்

இன்றைக்கு இருக்கும் இலங்கை, சிங்களவர் எவருக்கும் பண்டைக்காலத்தில் சொந்தமான நிலமன்று சிங்களவர் அனைவரும் தமிழருக்குச் சொந்தமான அந்தத் தமிழ்கிளை நிலத்தில் குடியேறிய (வந்தேறிகள்) பிற இனத்தார் ஆவார். புத்தபிரான் பரி நிர்வாணமடைந்த விசாகப்பௌர்ணமி தினத்தில் விசயன் எனறவன் இலங்கையில் அடியெடுத்து வைத்த நாள் முதல், அந்நாட்டின் வரலாறு எழுத்தில் வடிக்கப் பட்டுள்ளது. தீபவம்சம், மகாவம்சம் சூளவம்சம் முதலான மூன்று பழஞ்சுவடிகளும் இலங்கையின் வரலாறு (சிங்களவர்கள் வந்தேறிகள் என்பதைக்) கூறும்.

இந்த விசயன் என்பவன் கலிங்கத்து (ஒரிசா) அரசவம்சம், லாலா தேசத்து (குசராத்) மன்னன் சிங்கபாகுவின் மகன். விசயனும், அவனது 700 சகாக்களும் நாட்டு மக்களுக்கு இழைத்த கொடுமைகளைச் சகிக்காத சிங்கபாகு அவர்களின் தலைகளை மொட்டையடித்து நாவாய்களில் ஏற்றி நாட்டைவிட்டே துரத்திவிட்டான். சிங்கள மக்கள் தங்களின் ஆதி பிதாமகன் என்று உரிமை கொண்டாடும் விசயன், தன் 700 சகாக்களுடன் தென்னிலங்கைக்கரையில் ஒதுங்கினான். இவர்கள் தென்னிலங்கைக் காடுகளில் வேடுவப்பெண்களுடன் கூடி மகிழ்ந்து வம்ச விருத்தி பண்ணினர். ஆனால் விசயன் அரச குலப் பெண்கள்தான் தனக்கு வேண்டுமென்று



படிப்பகம்

www.padippakam.com



விரும்பியதால் பின்னர் தென்பாண்டிய மன்னன் பெண் கொடுத்தான். 700 பேருக்கும் மன்னன் தமிழ் நாட்டிலியே திருமணம் செய்து வைத்தான்.

## மொழி

மொழி என்பது கருத்துப் பரிமாற்றத்துக்கு உதவுவது என்றும், அது ஒரு 'கருவி' தான் என்றும் பலர் பொருள் கொள்கின்றனர். கருவி என்பது **கைகளின் நீட்சி** என்பர் ஹெகல் கருவி மனிதர்களின் உணர்வைப் பாதிப்பதில்லை. மனிதனின் அனுபவம் உணர்வைத் தருகிறது.

மொழி மனிதனுக்கு இயல்பானது **தாய்மொழி கருத்து வளர்ச்சிக்கு பயன்படும்.** ஒரு சொல் ஏற்படுத்தும் உணர்வை ஒரு கருவி ஏற்படுத்த முடியாது எனவே, மொழி ஒரு தேசிய இனத்தின் ஒட்டுமொத்தமான உணர்வுப் பூர்வமான சின்னமாக கொள்ளப்படுகிறது. ஒரு நாடு சிறிது-பெரிது என்றில்லாமல் தேவைக்கேற்ப மொழி-இன அடிப்படையில் நாடு அமைவதை உலகம் ஒத்துககொண்டுவிட்டதால் '' இனச்சிக்கலுக்கு '' தீர்வு காணப்படுகிறது. பொதுவுடைமையின் பேராலோ தேசியத்தின் பேராலோ மொழி, பண்பாடுகள் அழிக்க முற்படுவதை மக்கள் விரும்ப வில்லை என்பதைத்தான் ரசியா - யூகோசிலோவியா - செக்கோசுலோவியா நாட்டு நடப்புகள் நமக்கு தெரிவிக்கின்றன.

பொதுவுடமைக் கொள்கையால் பிரிந்து இருந்த செர்மனி மீண்டும் ஒரே நாடாக மொழியின் பெயரால் இணைந்திருப்பது மொழியின் பெயரால் நாடு அமைதல் வேண்டும் என்பதையே காட்டுகிறது 73ஆண்டுகள் இணைந்திருந்த செக்கசுலோவியா இரண்டு நாடுகளாக தன்னிச்சையாகப் பிரிந்துவிட்டது 75 ஆண்டுகளாக இணைந்-திருந்த யூகோசுலோவியா இன்று செர்ப்சு - குரோட்சு - போசுனியா என்று மூன்று நாடுகளாக மாறிப்போரிட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, தேசிய இனப் பிரச்சனை என்பது முதன்மையாக மொழி, பண்பாட்டுக்கூறாக அமைந்தது எனத் தெரிகிறது ''மொழி-இனத்தின் பேரால் சுய நிர்ணய அதாவது பிரிந்து போகும் உரிமையை ஆதரிப்பவர்கள் பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பவர்கள் என்று குற்றம் சாட்டுவது முட்டாள் தனமானது'' - என்றார் லெனின்.

மொழி அழிந்தால் இனம் அழியும் - என்கிற உண்மையை லெனின்-இசுடாலின் - பெரியார் - தாகூர் அத்தனை பேரும் அறிவித்தார்கள். ஆனால், இந்தி ஆதிக்க பார்ப்பானிய-பணியாக்கள் இந்தி-மொழியை புகுத்தி இந்தியாவை 'இந்து' மயமாக்கப் பார்க்கிறார்கள். பெரியார் அறிவித்த 1937 இந்தி மீது தொடுத்தப் போர் இதனடிப்படையில்தான். மொழி ஒரு மேல் 'கட்டுமானம் இல்லை' அது காலங்காலமாக வாழ்வது, அதை அழிக்க நினைத்தால் இனச்சிக்கல்கள் உருவாகும் அதுதான் இன்று பல்வேறு இந்திய மாநிலங்களில் வெடித்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## தவறான புரிதல்கள்

உண்மையை அறியாதவர்கள், அறிந்துகொள்ள மறுப்பவர்கள், இங்கே இலங்கை இனப் பூசலை வைத்து, இந்தியாவின் ஏனைய மொழிபேசும் மக்கள் ''மலையாளிகள் முதலிய மற்றவர்களும்தான், உலகின் பல நாடுகளில் வாழ்கிறார்கள்; ஆனால், இந்தத் தமிழர்கள் மட்டும்தான் எங்கே போனாலும் சிக்கல் படுகிறார்கள். போன இடத்தில் பொருந்தி வாழாமல் உரிமை பேசுவதனால்தான் அவர்கள் உதைபடுகிறார் கள்.'' என்று தமிழர்களைக் கேலி பேசுவதையும், இனவுணர்வில்லாத தமிழர்கள் அதற்கு ஆமாம் போடுவதையும் பார்க்கிறோம்.

அது உண்மைக்கு புறம்பான கூற்று என்பதை உணர்ந்து பார்த்தால் புரிந்து கொள்ளலாம். ஆம்! மலையாளிகள் போன்றோர் பிற நாடுகளில் உள்ளதற்கும், இலங்கைப் போன்ற சில நாடுகளில் தமிழர்கள் உள்ளதர்க்கும் பெறுத்த வேறுபாடு உண்டு.

ஈழத்தமிழர்கள் 'உரிமைக்கோரிப் போராடுவதைப் ''பிழைக்கப் போனவர்கள் சுதந்திரம் பற்றி பேசலாமா?'' என்று கேலி பேசுவது பிழையான கூற்றாகும். இலங்கையின் ஈழத்தமிழர்கள் மட்டுமல்ல, இந்தியா வம்சா வழித் தமிழர்களைக்கூட அவ்வாறு கேலி பேசமுடியாது ஏனெனில், ஒரு நாட்டில் அந்நாடு உரிமை (சுதந்திரம்) பெறுவதற்கு முன்பு அங்கு வாழ்ந்து வந்த மக்கள் எல்லோரும் உரிமை பெற்றதும் அந் நாட்டின் சட்டபடி பழங்குடிமக்களேயாவார். அம்மக்களில் ஒரு பிரிவினர்க்கு அதை மறுப்பது அந்நாட்டு உரிமையையே மறுப்பதாகும்.

மலேசியா, பர்மா, மொரிசியசு போன்ற நாடுகளைப் பொறுத்தவரை அங்கு வாழும் தமிழர்களில் பெரும்பான்மையோர் அந்நாடுகள் விடுதலை பெருவதற்கு முன் பும், இந்தியா விடுதலை பெருவதற்கு முன்பும், இவற்றை ஒருங்கே அடிமைப்படுத்தி வைத்திருந்த ஏகாதிபத்தியங்களால் அங்கு காடு திருத்தி நாடாக்கவும், குளம் தொட்டு வளம் பெருக்கவும் தமிழகத்திலிருந்து வலுக்கட்டயமாக அழைத்துச் செல்லப்பட்டவர் களின் மரபினரே ஆவர். அதனால் அவர்கள் அந்நாடுகளுக்கு அயலவரல்லர்; அந் நாடுகளின் தேசிய சிறுபாண்மை இனத்தவரேயோவர். அந்நாடுகள் விடுதலை பெற்ற பின்பு, இந்தியாவும் விடுதலை பெற்ற பின்பு இந்தியக் கடவுச் சீட்டோடு அங்கு போன -வர்கள் தான் இந்தியராவாரே தவிர, அக்காலக் கட்டத்திற்கு முன்பிருந்தே வாழ்ந்து வரும் தமிழரல்லர்.

மேற்குறித்த மலையாளிகள் முதலானோர் அப்படிப்போனவர்களே, அந்நாடு களின் விடுதலைக்கு முன்பிருந்தே வாழ்ந்து வரும் தமிழர்களையும் சமமாக வைத்துப் பேசுவது அடிப்படையிலே பிழையானதாகும். ஏன்? ஒரே நாடு என்று சொல்லப்படும் இந்தியாவிலேயே, கருநாடகத்திலிருந்தும், பம்பாயிலிருந்தும் தமிழர்கள் ஏதலிகளாக விரட்டப்படுகிறார்கள் என்றால் அதைவிட கொடுமை வேறென்ன?



படிப்பகம்

www.padippakam.com



## தமிழ் தேசியம்

ஒரு தேசிய இனம் விழித்துக்கொண்டு விடுதலைக் கேட்க ஆரம்பித்துவிட்டால் அதை யாராலும் தடுக்க இயலாது, பிண மலைகளைக் குவித்து குருதியை ஆறாய்ப் பெருக்கியேனும் விடுதலைக் கனியைப் பெற்றேதீர்வர் இது வரலாறு.

ஓர் உயரிய தத்துவத்தையோ - ஒரே மதம் என்பதையோ - ஒரே மரபினம் என்பதையோ சொல்லி ஒரு தேசிய இனத்தைப் பிரித்து வைக்கவும் முடியாது; வெவ்வேறு தேசிய இனங்களைச் சேர்த்து வைக்கவும் முடியாது.

செர்மன் தேசிய இனத்தை மேற்கு செர்மனி (23-5-49) என்றும் கிழக்கு (7-10-49) செர்மனி என்றும் இரண்டாய் பிரித்தனர்; அதுவும் சுவரெழுப்பி பிரித்தனர். மேற்கு-முதலாளித்துவநாடு; கிழக்கு- பொதுவுடமைநாடு, இந்த தத்துவ வேறுபாடு அவர்களை 40 ஆண்டுகாலத்திற்குத்தான் அடக்கி வைக்கமுடிந்தது **"நாங்கள் ஒரே தேசிய, இனம் எங்கள் மொழி ஒரே செர்மன் மொழி, நாங்கள் ஒரே நாடாகத்தானிருப்போம்"** என்று சீறி எழுந்தனர் செர்மானியர்கள் விளைவு - சுவர் சுக்கு நூறானது. ஒன்றுபட்ட செர்மனி (3-10-90) உதயமானது தெற்கு வியட்நாம்- வடக்கு வியட்நாம் நிலையும் இதுதான் அமெரிக்காவுடன் 21 ஆண்டுகள் (1945-75) சண்டையிட்டு வென்று ஒரே வியட்நாம் (24-5-76) உருவாக்கப்பட்டது.

ஒரேமதம்- முகமதியமதம்; ஒரே கடவுள்- அல்லா; ஒரே வேதம்- குர்ஆன்; ஆனால் மொழி மட்டும் வேறு. வங்காளமொழிபேசும் மக்கள்- உருதுமொழியினருக்கு அடிமையாயிருக்க முடியாதென்று, வங்க மொழிக்காக வங்க தேசத்தை தனியே (17-2-71) அமைத்துக்கொண்டனர்.

சோவியத் ஒன்றியத்திலிருந்து லிதுவேனியா, மால்தோவியா, லாட்வியா, எசுடானியா, அர்மினியா, சார்சியா, போன்ற ரசியரல்லாத தேசிய இனங்கள் துண்டித்-துக்கொண்டு சுதந்திர நாடாகத் திகழ்கின்றன; பொதுவுடமைக் கொள்கையால் அவர்களை பிணைத்து வைக்க முடியவில்லை, ஒரேஇனம் என்பதால் (ஆரிய இனம்?) பிரான்சையும், இங்கிலாந்தையும் இணைத்திட முடியாது; இரண்டும் வேறு மொழி -யினங்கள்.

தேசிய இனத் தன்மைகளைக் காக்க வேண்டிய இன்றியமையான்மைக்கு இன்றைய அமெரிக்க நடப்புகளே சான்றாவன. அய்க்கிய அமெரிக்கா ஒரு புது நாடு என்பதும், கொலம்பசினால் அது கண்டு பிடிக்கப்பட்ட பிறகு அய்ரோப்பாவின் பல்வேறு நாடுகளின், பல்வேறு தேசியஇனமக்கள் குடியேறி தங்கள் மொழி இனப் பண்பாடுகளை மறந்து கலந்துருவான ஒரு மக்கட் சமுதாயமே இன்றைய அமெரிக்கா என்பதும் தெரிந்ததே, இன்று ஒவ்வோர் அமெரிக்க குடும்பமும் தம் முன்னோர்கள்



படிப்பகம்

www.padippakam.com



எந்த நாட்டிலிருந்து அமெரிக்காவில் குடியேறினர்? தங்கள் முன்னோர்களின் மொழி, பண்பாடு பழக்கவழக்கமென்ன? என்றெல்லாம் ஆராயத்தலைப்பட்டு; அந்தமொழியை -யும், பண்பாட்டையும் உயிர்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதைப் பார்க்கின்றோம் (தமிழகத்தில் செயலலிதாஅரசு அதையே செய்துவருவது கவனிக்கத்தக்கது. )

ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போல அறிவியல் என்பது ஒரு பக்கத்தில் அணைத்துத் தேசியப் பொதுமையையும், மறுபக்கம் மொழிவழித் தேசியத் தன்மை யையும் தெளிவாகவும் வலுவாகவும் செதுக்கி வருகிறது என்பதேயாகும். மேலும் மனிதகுலத்தின் வேற்றுமையில் ஒற்றுமை எனும் இலக்கணத்திற்கமைய இயற்கையான கூறுபடுத்துலுக்கு ஒரு கருவியாக இருப்பது மொழிவழித் தேசியமாகும். எனவே, தமிழ்மொழிவழித் தேசியத்திற்கு பாதுகாப்பு தேடுவதும், மேம்பாடு நாடுவதும் அணைத்துலக தேசியத்திற்கு பகையானதல்ல, வகையானதே.

தமிழ்நாடு ஆங்கிலேயர் வருகைக்கு முன்னர் தனியாகத் தானிருந்தது. **இந்தியா என்றைக்கும் ஒரே நாடாக இருந்ததில்லை** 56 தேசங் களாகத்தான் இருந்தது. அதேபோல இலங்கையிலும் ஈழம் கி.மு. 350-க்கு முன் தொடங்கி கி.பி. 1662-இல் போர்த்துக்கீசியர் வருகைவரை தனி நாடாகத்தானிருந்தது. ஒன்றாக இருந்ததை இரண்டாகப் பிரித்தால்தான் பிரிவினையாகும். இரண்டாக இருந்ததை ஒன்றாக்கி மீண்டும் இரண்டாக்குவது பிரிவினையாகாது. அது பழைய நிலைக்கு திரும்புவதாகும் (Resturation of statue quoante).

## ஈழத்தமிழர் பிரச்சனை

ஈழத்தமிழரின் பிரச்சனையை அறியாதோர் பலர், அறிய விரும்பாதோர் பலர், பிரச்சனைப்பற்றி ஓரளவு அறிந்து குரல் கொடுப்பவர்கள்கூட பிரச்சனை என்ன என்பதனை அறியாதிருப்பது வருந்தத்தக்கது. இலங்கைக்கு 1948-இல் விடுதலை வழங்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இந்த விடுதலை என்பது வெள்ளையன் ஆட்சிக்குப்பதில் சிங்களவன் ஆட்சிக்கே வழிகோல்யுள்ளது. விடுதலை உணர்வுள்ள நாம் வெள்ளையர் ஆட்சியை வெறுப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. ஆனால், வெள்ளையன் ஆட்சியைவிடப் சிங்களவன் ஆதிக்கமோ ஈழத்தமிழினத்தை பூண்டோடு அழிக்கும் நிலைமைக்கு தள்ளியுள்ளது. 1948-க்கும் 1992-க்கும் இடையிலான ஏறக்குறைய 42-ஆண்டுகால இடைவெளியில் ஈழத்தமிழரின் கொடியுரிமை, குடியுரிமை, வாக்குரிமை, நிலவுரிமை, தொழில்உரிமை, மொழியுரிமை, கல்வியுரிமை, ஆகிய உரிமைகள் அணைத்தும் அழிக்கப்பட்டு, ஈழத்தமிழரை ஈழ மண்ணிலேயே வேரோடு சாய்க்கும் முயற்சியை ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு சிங்கள அரசும் திட்டமிட்டு செயல்படுத்தியுள்ளது.

மொழியின் அழிவு ஒன்றே ஓர் இனத்தை முற்றாக அழித்துவிடும். ஆனால் இலங்கையில் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு சிங்கள அரசும் மேற்குறிப்பிட்ட உரிமைகள்



படிப்பகம்

www.padippakam.com



அனைத்தையும் ஈழத்தமிழரிடமிருந்து திட்டமிட்டே பறித்தது. மேற்குறித்த அழிவுகளுள் தலையாய அழிவு ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு சிங்கள அரசும் தமிழ் ஈழ மண்ணில் நடத்திய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமாகும். தமிழ் நிலப்பகுதியை சிங்களமயமாக்களின் அடிப்படை நோக்கம், தமிழீழத்தின் தொடர்ச்சியான நிலப் பரப்பை துண்டித்தது தமிழரை தமிழீழ மண்ணிலேயே சிறுபான்மை இனமாக்கி பாரளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் காலப்போக்கில் குறைத்து தமிழினத்தை முற்றாக அழிப்பதே ஆகும்.

ஓர் இனத்தின் நிலையான வாழ்விற்கு வரையறை செய்யப்பட்ட நிலப்பரப்பு தேவை. நிலம்தான் ஓர் இனத்திற்கு நிலையான வாழ்வைக் கொடுக்கமுடியும். திட்டமிட்ட நிலப்பரப்பில்தான் ஓர் இனத்தின் மொழி, பண்பாடு, நாகரிகம், வாழ்வியல் முறை ஆகியவற்றை நிலை கொள்ளச்செய்யமுடியும். இதை ஆங்கில அரசியல் அறிஞர் ஒருவர் " Land is nescessary for the self expression of an ethnic group and also for its physcial survial " என்றார்.

தேசம் என்ற சொல்லாட்சிக்கு உலக அரசியல் மேதைகள் கொடுத்திருக்கிற வரையறையின்படி ஒரு நாடு என்பது ஒரே மொழி, ஒரே பண்பாடு, ஓரளவு ஒத்த வெப்ப நிலை, ஒத்த புவியியல் அமைப்பு ஒத்த உடற்கூறு, பழக்க வழக்கங்கள், அதாவது உணவு உடை வீடமைப்பு இவையே, இந்த வரையறையின்படி இன்றைக்கு தமிழ்நாடு ஒரு தேசமாக இருக்க எல்லாத் தகுதியும் பெற்றுள்ளது. இதைப் போலவே பல தேசங்களும் இந்தியத் துணைக்கண்டத்தில் இருக்கிறது.

## தமிழீழக் கோரிக்கை

ஈழத்தமிழ் மக்களைப் பொருத்தவரையில் தமிழினத்தை எதிர்நோக்கும் அழிவைத் தடுக்க **தந்தை செல்வா** தலைமையில் பல்வேறு அரசியல் வழி முறைகளைக் கையாண்டனர். ஒற்றையாட்சியில் ஒத்த உரிமை பெற்று வாழ முயன்றனர். முயற்சி தோல்வி கண்ட நிலையில் இணைப்பாட்சியில் இனிய வாழ்வு காண முயன்றனர். நாட்டின் ஒற்றுமையைப் பேணி தமிழ் இனத்தின் தனித்துவத்தை இறுக அணைத்து இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஓங்கி குரல் எழுப்பினர். இக் கோட்பாட்டினைச் சிங்கள அரசு ஏற்க மறுத்த நிலையில் இணைப்பாட்சியில் இருந்து விலகி மாநில தன்னாட்சி, பிரதேச சபை, மாவட்ட சபை அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளுதல், பரவலாக்கல் என்று பல வழிகளிலும் செவிமெடுக்க மறுத்ததின் விளைவு 1976- இல் தொடங்கி இறைமையுள்ள தமிழீழக் கோரிக்கையை ஓங்கி ஒலித்து வருகின்றனர்.

இப்போராட்ட வழி முறையில் கூட பாராளுமன்றத்திற்குள்ளே எதிர்ப்புக் குரல் எழுப்புவதோடு தொடங்கிப் பாராளுமன்றத்திற்கு வெளியே காந்திய அடிப்படையில்



படிப்பகம்

www.padippakam.com



அறவழிப் போராட்டத்தை நடத்தினர். இவை ஒன்றிற்கும் சிங்கள அரசு செவிசாய்க்க மறுத்ததின் விளைவுதான் வெறிநாய்க்கு முன்னால் அறவழிப் போராட்டாம் எடுபடாது என்ற முடிவுக்கு வந்து, ஆயுதம் தாங்கிய போராட்டத்தை **புலிகள் இயக்கம்** தொடங்கிய பின்புதான், ஈழத்தமிழர்களை நாம் எளிதில் அடக்கமுடியாது என்ற உண்மையை உணரத் தொடங்கியுள்ளது. உலகின் கவனமும் தமிழீழத்தின்பால் ஈர்க்கப்பட்டுள்ளது.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

உலகின் பல நாடுகளில் சுமார் ஒரு கோடிக்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்கின்றனர். இந்தியாவின் பிற மாநிலங்களிலும் அதே அளவு தமிழர்கள் வாழ்கின்றனர் இந்த இரண்டு கோடி தமிழர்களின் நலனை பாதுகாப்பது அய்ந்து கோடி தாய்த் தமிழர்களின் கடமையாகும். தாய்த் தமிழ்நாடு விழிப்புற்று இருந்தால்தான் தன்னையும் காக்கமுடியும்; சேய்த் தமிழர்களையும் காக்கமுடியும். தாய்த் தமிழகம் போலித் தலைவர்களையும் அவர்களின் ஆரவார அரசியலையும் நம்பி ஏமாந்துவிட்டது. தமிழினத் தலைவர்கள் எனத் தங்களுக்குத் தாங்களே பட்டம் சூட்டிக் கொண்டவர்கள் தன்னலத் தலைவர்களாகத்தான் காட்சித் தந்தார்கள். உலகத் தமிழர்களுக்கு எழுச்சியூட்டி வழிகாட்ட வேண்டிய கடமையில் இருந்து அவர்கள் தவறிவிட்டார்கள்.

ஆனால், தாய் செய்யத் தவறிய கடமையைச் சேய் மேற்கொண்டுவிட்டது. ஆம்! **தமிழ்த்திரு. வே. பிராபாகரன் தலைமையில் விடுதலைப் புலிகள்** நடத்திவரும் தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழீழ மக்கள் மத்தியில் மட்டுமல்ல; உலகத்தமிழர்களின் நடுவே மகத்தான திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ஈழத் தமிழ்மக்களை அழிவினின்று காக்க இன்று ஒரே ஒரு இயக்கம்தான் போராடுகிறது. **இந்த இயக்கம் ஒன்றுதான் மக்களோடு ஒன்றிய போராட்டத்தை நடத்துகின்றது**. மற்ற இயக்கங்களெல்லாம் அரசியலில் செல்லாக்காசாகவும், தமிழ்மக்களைக் காட்டிக் கொடுக்கும் கயவர்களாகவும் மாறி உள்ளனர். இவ்வியக்கங்களை நாம் பொருளாக வைத்துப் பேசுவது நம்மை நாம் ஏமாற்றும் முயற்சியாகும்.

பாலத்தீன விடுதலை இயக்கம் தாம் இழந்த நாட்டினை மீட்கப் போராடுகின்றனர் தமிழீழ விடுதலைப் புலிகளோ தாம் இருக்கும் நாட்டினை இழக்காதிருக்கப் போராடுகின்றனர். பாலத்தீனர்களை விட வரலாற்றுச் சான்றும் சட்ட வலுவும் புலிகளுக்கு உண்டு. யாசர் அராபத் தலைமையில் இயங்கும் பாலத்தீன விடுதலை ஆயுதம் தாங்கிய போராட்டத்தினை நடத்துகின்றது. தமிழீழ விடுதலைப்புலிகளும் தமிழ்த்திரு. வே. பிராபாகரன் தலைமையில் தமிழ் மண் காக்க தாயகம் மீட்கப் போராடுகின்றனர்

விடுதலைப் புலிகளின் ஈகமும் வீரமும் தமிழினத்தைத் தலைநிமிர வைத்துள்ளன புலிகள் படைத்துவரும் புதிய புறநானூறு தமிழர்களின் பெருமையை பாரறியச்



படிப்பகம்

www.padippakam.com



செய்துள்ளது. தமிழ்நாட்டுத் தலைவர்கள் எவரினாதுலும் இதுவரை தமிழினத்திற்குத் தேடிக் கொடுக்க முடியாத பெருமையை தமிழ்த்திரு. வே. பிரபாகரன் தலைமையில் விடுதலைப் புலிகள் தேடித் தந்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் உலகெங்கும் உள்ள தமிழர்களிடையே தமிழ்த் தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இந்த உணர்வு மேலும் கட்டி வளர்க்கப் படவேண்டும். பாலத்தீனிய விடுதலைப் போராட்டம் உலகெங்கும் உள்ள அராபியத் கலைத் தட்டி எழுப்பி அவர்களிடையே அராபியத் தேசிய உணர்வை ஊட்டி ஒன்றுபட வைத்துள்ளது. அதைப் போலத் தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழ் தேசிய உணர்வை ஊட்டி உலகத் தமிழர்களை ஒன்றுபட வைக்கும் முயற்சிகளில் ஒவ்வொரு தமிழரும் ஈடுபட வேண்டும்.

## விடுதலைப் புலிகள் மீதான தடை

" தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வெளிநாட்டிலிருந்து செயல்படும் அமைப்பாகும். எனவே இந்தியாவில் அதை தடைசெய்யமுடியாது. ஆனால் அதன் நடவடிக்கைகளை தடைசெய்ய முடியும் "

—என்று கடந்த 10-5-92 அன்றுதான் நடுவண் அரசின் உள்துறை இணையமைச்சர் எம்.எம். சேக்கப், கொச்சியில் ஒரு செய்தியாளர் கூட்டத்தில் கருத்துக் கூறினார். ஆனால் அவர் கருத்துக்கூறிய எட்டு நாள்களுக்குப் பின் இந்திய அரசு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு தடை செய்திருக்கிறது. அத்துடன் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு தரும் தலைவர்கள், இயக்கங்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அரசு எச்சரித்துள்ளது.

இந்திய அரசு தடை செய்தது விடுதலைப்புலிகள் இயக்கத்தை அன்று. உலகத் தமிழரின் ஒட்டு மொத்த முன்னேற்றத்தையே ஆகும்.

நடுவண் (இந்திய) அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை எப்பொழுது தடைசெய்தது என்பதை கவனிக்க வேண்டும். சிறிலங்கா அரசின் சகல கட்டுப் பாடுகளையும் உடைத்துத் தள்ளிக்கொண்டு ஒரு புதிய அரசாக வெளிக்கிளம்பும் பொழுதுதான் தடை விதிக்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் தலைமையில் தமிழீழம் அமையக்கூடாது என்பதும், அமைதிப்படை என்ற போர்வையில் ராசீவ் காந்தியின் இறுமாப்பில் தமிழீழத்திற்குள் புகுந்த இந்தியப்படையின் முகமூடியை உலகிற்கு எடுத்துக்காட்டியதும் தமிழீழ விடுதலைப்புலிகளை தடைசெய்யக் உட்காரண மாயிற்று. இத்தடையானது இந்தியாவின் இறைமையை அடிப்படையாகக்கொண்டு விதிக்கப்பட்டதாக தெரியவில்லை. இந்திரா காங்கிரசின் அதிகாரத்தால் விதிக்கப்பட்ட தாகவே தெரிகிறது. ( அதுவும் தமிழக முதல்வர் செயலலிதாவின் அழுத்தம் தாள முடியாமலேயே இந்திய அரசு விடுதலைப்புலிகளின் இயக்கத்தை தடை செய்துள்ளது?



படிப்பகம்

www.padippakam.com



## தமிழ் ஈழம் தனித்து வாழமுடியும்.

தமிழீழம் தனித்து வாழ முடியுமா? முடியும். இலங்கையின் மொத்தப்பரப்பில் 1/3 பாகமே தமிழீழ நாட்டின் பரப்பாகும் (8200 சதுர மைல்கள்). உலகில் தமிழ் ஈழத்தை விடச் சிறியதாக சுமார் 80 நாடுகள் இருக்கின்றன. இசுரேல் தமிழீழத்தை விடச் சிறிய நாடு. ''பியுரிடோரிகோ'' தமிழீழத்தை விட மிகச்சிறிய சுண்டைக்காய் அளவு) நாடு (தீவு). அமெரிக்காவின் நண்பன் பிரேமதாச என்ற காரணத்தைக் காட்டி ஈழ விடுதலை சாத்தியமற்றது என்று சொல்லுபவர்கள்கூட அமெரிக்காவின் பிடியிலிருந்து சுண்டைக்காய் நாடான 'பியுரிடோரிகோ' விடுதலைப் பெறப் போராடுவதை ஆதரிக்கவே செய்கின்றனர். அந்த சுண்டைக்காய் நாடு தனித்து வாழ முடியுமெனில் தமிழீழமும் தனித்து வாழ முடியும்.

எல் சால்வடார், கவுடமாலா, நிகரகுவா, கோசுடாரிகா, பனாமா போன்றவை நடு அமெரிக்கப் பகுதியிலுள்ள தனி நாடுகளாகும். இந் நாடுகள் அனைத்திலும் வாழும் மக்கள் பேசும் சுபானிசு மொழியால் ஒன்றுபட்டவர்கள்; கடை பிடிக்கும் உரோமன் கத்தோலிக் மதத்தாலும் ஒன்றுபட்டவர்கள்; மொழியால், மதத்தால், நில பரப்பால் ஒன்றுபட்டவர்கள் மொழியால், மதத்தால், நிலப்பரப்பில் ஒன்றுபட்டவர்கள் கூடத் தனி நாடுகளாக வாழும்போது மொழியால், மதத்தால், இனத்தால் சிங்களவரிடமிருந்து வேறுபட்ட தமிழர்களை— நிலபரப்பு ஒன்றாக இருப்பதை மட்டுமே காரணமாகக் காட்டிக் கட்டாயப்படுத்தி ஒன்றாக வைத்திருக்க முயல்வது நியாயமற்ற செயலாகும்.

**ஓர் இனத்தின் விடுதலை வேட்கையை உலகின் எந்த சக்தியாலும் தடுத்திட இயலாது தமிழன் வாழ வேண்டின் தமிழன் தன்னை ஆளவேண்டும்.**

### ஈழத்தின் இயற்கை வளங்கள்

இலங்கையின் மொத்தப் உற்பத்தியில் ஈழத்தில் மட்டும் விளையும் நெல் 31·/. மிளகாய் 18·/.; வெங்காயம் 38./·; உப்பு 90·/. இலங்கையின் மொத்த மீன் வளர்ப்பில் தமிழீழத்தில் மட்டும் உள்ளது 73·/.; இலங்கையில் மொத்த உற்பத்தியில் தமிழீழத்தில் மட்டும் மீன் உற்பத்தி 52·/.; பதனிடப்பட்ட மீன் உற்பத்தி 90·/.; இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் கடலட்டை தமிழீழத்தின் வடபகுதியில் மட்டுமே உற்பத்தியாகிறது.

சிங்களப் பகுதியில் உற்பத்தியாகும் சிமெண்டுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் அனைத்தும் தமிழீழத்திலிருந்துதான் செல்கிறது. இல்மேனைட், மோனசைட், இலிக்காமலை போன்ற கனிவளங்கள் ஏராளமாக இருக்கின்றன. இவை இப்பொழுது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.



படிப்பகம்

www.padippakam.com



பருத்தி உற்பத்திக்கு உலகிலேயே சிறந்த இடம் யாழ்பானத்திலுள்ள பூ நகர்ப் பகுதி என்று ரசிய ஆய்வாளர்கள் எடுத்துக்கூறியும் சிங்கள அரசு அதை தரிசாகப் போட்டு வைத்திருக்கிறது. இலங்கையின் சர்க்கரை உற்பத்தி ஆலைகள் தமிழீழத்தில் மட்டுமே உள்ளது. அது போல காகித உற்பத்தியும் இங்கு மட்டுமே உள்ளது.

தமிழ் ஈழம் தனிநாடாகுமானால் தனது விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும், மீன் வளத் துறையிலும் ஏராளமாக நவீன முறையில் அபிவிருத்தி செய்ய வாய்ப்புகள் உண்டு. வேலை வாய்ப்பில் இழைக்கப்பட்ட அநீதி காரணமாக ஈழத் தமிழர்கள் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற முன்னேறிய நாடுகளிலேயே பொறியாளராக, மருத்துவராக, நிபுணராக பணியாற்றி வருகின்றனர். ஈழம் தனிநாடாகும் போது அவர்கள் தாயகம் திரும்பி ஈழத்தின் வளர்ச்சிக்காக தமது மூளை ஆற்றலை வழங்கத்தயாராக இருக்கிறார்கள். இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குத் தமிழர்களின் மூளையும் உழைப்புமே முக்கியமான காரணங்களாகும்.

விவசாயத் தொழில் வளர்ச்சிக்காக மலையகத் தமிழர்களைத் தமிழ் ஈழத்தில் குடியமர்த்துவதன் மூலம் பெறமுடியும். எனவே, தமிழீழம் தனிநாடாகும்போது சிங்கள நாடுதான் தனிநாடாக வாழத் தடுமாறும் நிலை வரும்; அவர்களால் தோட்டத் தொழிலை நடத்த இயலாது. சப்பானியர்களைப் போல அறிவுடன் உறுதியாக உழைக்க ஈழத்தில் தமிழர்கள் உண்டு. சோசலிசப் பாதையில் நாட்டை முன்னேற்றத் திட்டங்கள் உண்டு. தமிழீழம் தனிநாடாகும்போது, உலகிலேயே தலை சிறந்த நாடாகும் என்பதில் அய்யமில்லை.

## தமிழீழம் — அவசியத் தேவை

தமிழின மக்கள் உலகம் முழுவதும் பரவி வாழ்ந்தாலும், அங்கெல்லாம் அவர்கள் இரண்டாதரக் குடிமக்களாகவே நடத்தப்படுகின்றனர். தாய்த் தமிழகமோ— தமிழர்களை தமிழ்நாட்டிலேயே ஏதிலி(அகதி)களாக நடத்துகிறது. தமிழ்—தமிழன்— தமிழ் நாடென்று பேசினால் கருப்புச் சட்டங்களினால் தமிழரை அடக்கி ஒடுக்கிவருகிறது.

தமிழீழம் கேட்டு உரிமைப்போரை தமிழீழமக்கள் நடத்திவருவதால், சிங்கள இனவெறி அரசால் ஏதிலிகளாக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் உலகநாடுகளிலெல்லாம் தஞ்சம் புகுந்துள்ளனர். உலகநாடுகளில் ஆங்காங்கே தோன்றியுள்ள இனவெறிக் கும்பல் அங்கே தஞ்சம் புகுந்துள்ள ஈழத்தமிழர்கள் தங்களின் அவல நிலையை விளக்கி தமிழ்நாட்டரசுக்கு பல தடவை கடிதங்கள், தொலைவரி மூலம் தெரியப்படுத்தியும், தமிழக அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மாறாக, தமிழ்மக்கள் தாங்களாகவே தாங்களாகவே விரும்பித்தான் நாடு திரும்புகிறார்கள் என்ற பொய் பிரச்சாரம் செய்துகொண்டே, தமிழர்களை வலுக்கட்டாயமாக நாடு கடத்தியது, தமிழக அரசு. தமிழக— புதுவை— இந்தியஅரசின்



படிப்பகம்

www.padippakam.com



நயவஞ்சக செயலால் அயல் நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழக—புதுவை—இந்தியஅரசின் இந்தச் செயலானது ஈழத் தமிழர்கள் மீது அற்ப சொற்ப அக்கரைக்காட்டும் சர்வதேச பொது நிறுவணங்களின் வாய்களுக்கு பூட்டு போடுவதோடு அவர்களை அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியுள்ளது.

வெளிநாட்டவரை எப்படியாவது அனுப்பிடவேண்டும் என்று முயலும் செர்மன், சுவிசு போன்ற நாடுகளுக்கு தமிழகத்திலிருந்து அகதிகள் திருப்பி அனுப்பப்படு கின்றனர்; திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுத்து வருகின்றனர். வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் —தமிழ் அகதிகளின் அவலநிலைக்கு தமிழக அரசே முழுபொறுப்பு தாய்த் தமிழகத்தில் வாழும் தமிழர்களே முழுபொறுப்பு. தமிழிர் நலன்களுக்கு குரல் கொடுக்க வேண்டிய தாய்த் தமிழகமே இப்படியான அவல நிலைக்கு தள்ளுவது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

பெர்லின் நகரில் அதிகமாக வாழும் துருக்கியர்களுக்கும், செர்மானியர்களுக்கும் பிரச்னை வந்தபோது, அதனை தட்டிக்கேட்டது துருக்கிய அரசாங்கம். தமிழர்களுக்கு பிரச்னை வரும்போது தட்டிக் கேட்க எந்த அரசாங்கம் இருக்கிறது?

உலகில் இன்று தமிழர்களுக்கென்று தனிநாடு இல்லாத காரணத்தினாலேயே அய்.நா. அவையில் தமிழீழ விடுதலையை ஆதரித்து குரல் எழுப்ப வகையில்லாமல் போய்விட்டது. எனவே, தமிழரின்- உலகத் தமிழரின்பாதுகாப்பிற்காக தமிழகத்தில் அல்லது தமிழீழதில் தனி நாடு காண்பது அவசியமும் அவசரமான காரியமுமாகும்.

தென்னாப்பிரிக்காவில் நடப்பது **இன ஒதுக்கல்**; தமிழீழத்தில் நடப்பது **இன அழிப்பு**. (இட்லர் யூதர்களை கொன்றழித்ததை நினைவு கொள்ளுங்கள்). **இன ஒதுக்கலை** எதிர்த்து கூக்கரலிடும் இந்தியா, சிங்கள இனவெறி அரசு திட்ட மிட்டே செய்யும் **இன அழிப்பை** ஆதரிப்பதையும் கவனிக்கவேண்டும். இந்திய (பார்ப்பன) அரசு தமிழர்கள் (சூத்திரர்கள்) தனிநாடு பெறுவதை அனுமதிக்காது. அனுமதிக்குமேயானல் இங்குள்ள காச்மீர், பஞ்சாப், அசாம், தமிழ்நாடு போன்ற பிற நாட்டினங்களுக்கும் பதில் சொல்ல வேண்டிவரும். எனவே ஈழ விடுதலையை நசுக்கும் செயலில் இந்திய(பார்ப்பன) அரசு தொடர்ந்து ஈடுபட்டு வரும், சர்வதேச எல்லையில் சென்று கொண்டிருக்கும் புலிகளின் கப்பலை வழிமறித்து அழித்தல்; புலி களின் தலைவர்களை அழித்தல்; போன்ற செயல்களில் மீண்டும் ஈடுபடும் எனவே, தமிழர்களே ஈழ விடுதலைக்கு பொது எதிரியான இந்திய (பார்ப்பன) அரசை எதிர்த்து போர் தொடுப்போம்.



படிப்பகம்

www.padippakam.com



**தனித் தமிழ் நாட்டை அமைப்போம்.**

**ஈழ விடுதலையை வென்றெடுப்போம்.**

# வெல்லட்டும் புலிகள்!
# மலரட்டும் தமிழீழம்!

நன்றி:

தமிழர் வாழ்வுரிமை மாநாட்டுமலர்— வெளியீடு. பா. ம. க.

இந்திய அரசே இன்னுமா உறக்கம்— ப. அருளி.

ஈழப்புலிகளுடன் ஒரு வாரம்— எசு. எம். கார்மேகம்.

## *பிழை நீக்கி வாசிக்கவும்*

12 ம் பக்கம் 27 ஆவது வரி (கும்பலால் இன்னலுக்குள்ளான)

13 ம் பக்கம் முதல் வரி (புகுந்துள்ள ஈழத்தமிழருக்கு)

13 ம் பக்கம் ஆறாம் வரி

நாடுகள் தமிழகத்திலிருந்து அகதிகள் அனுப்பப்படுவதை முன்னுதாரணமாக கொண்டு அந்நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத்தமிழர்களை இலங்கைக்கே திருப்பி அனுப்பிவைக்கின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படியுங்கள் ! பரப்புங்கள் !!

# தினப்புரட்சி

பாட்டாளி மக்கள் கட்சி வெளியீடு

குறள் அச்சகம்

51, அய்யனார் கோயில் தெரு,
தமிழூர் (திலசை), புதுச்சேரி-9.

படிப்பகம்